நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் “தாய்வீடு” பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், ‘தாய்வீடு’ தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...


## ஆழத்து முத்துக்கள் 18

# ‘சங்கீதபூஷணம்’ சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

**சங்கீதபூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் - ஒரு இசை சகாப்தத்தின் பதிவு**

வெள்ளை வேட்டி, வெளீரென்ற அரைக்கைச் சட்டை, மேவி இழுத்த சுருளான பாகவதர் முடி, மலர்ந்த வசீகரமான முகம், எப்போதும் சங்கீதத்தையே முணுமுணுக்கும் அல்லது



விசில் இசைக்கும் உதடுகள் என்று சைக்கிளில் அவர் எங்கள் வீதிகளில் வலம் வருகின்ற காட்சி மிகவும் அலாதியானது. அரியாலை மக்களுக்கு அது ஒரு இனிய அனுபவமாக இருக்கும்.

அரியாலை மண்ணில் வித்தூன்றிப் பின்னர் தாயக மண் எங்கும் வேர் பதித்த சங்கீத-பூஷணம் ச.பாலசிங்கம் அவர்களைப் பற்றி எழுதுகிற போது கொஞ்சம் படபடப்பாகவே இருக்கிறது. இந்த மாபெரும் கலைஞன் மீது நான் கொண்டிருக்கும் அளவு கடந்த அன்பும், மரியாதையும் இதற்குக் காரணமாக இருக்-கலாம்.

பாலசிங்கம் மாஸ்ரின் கலைவாழ்வு ஆரம்-பத்தில் ஒரு நாடகக் கலைஞனாகவே அமைந்திருந்தது. இதற்கு அடிகோலியவர் இவரது தந்தையரான அண்ணாவியார் சபாபதி அவர்களாகும்.

அரியாலையூரின் பழம்பெருங் கலைஞர்-களிடம் குறிப்புகள் எடுத்த போதெல்லாம் அவர்கள் அடிக்கடி உச்சரித்த பெயர் அண்ணாவி சபாபதியார் என்பதாகும். பெரிய-தம்பி சபாதிப்பிள்ளை என்ற அண்ணாவி-யார் சபாபதி அவர்கள் அரியாலையிலும், யாழ்குடா நாட்டின் பலபாகங்களிலும் இசை நாடகங்களை மேடையேற்றிப் பெருமை சேர்த்தவர். சதி அனுஷியா, பவளக்கொடி, கிருஷ்ணன் தூது, இளங்குமரன், தூக்குத் தூக்கி, நளன் தமயந்தி, மனோகரா, பனை-யரசன், காத்தவராஜன், ஜயாதி, பதிபக்தி, அபிமன்யு, பூதத்தம்பி என்பன அண்ணாவி-யார் நெறியாள்கை செய்த நாடகங்களில் சில.

இவ்வாபறு புகழ் பூத்த நாடகக் கலைஞனின் ஆறாவது புத்திரரான பாலசிங்கம் அவர்கள் ஆரம்பத்தில் நாடகங்களில் பெண் வேடங்-களை ஏற்று சிறப்பாக நடித்து வந்தார். 1950இல் அரியாலை சனசமூக நிலையத்தில் மேடையேறிய நளன் தமயந்தி நாடகத்தில் தமயந்தியாக வேடமேற்றுப் பெரும் புகழ் பெற்றுக் கொண்டார். அண்ணாவியார் சபாபதி அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட இந்நாடகத்தில் ஒலிபொருக்கி இல்லாமலேயே நடிகர்கள்



பாடி நடித்தது குறிப்பிடத்தக்கது. இதில் பிரபல நடிகர்கள் ஈ.கே.குமரைய்யா, பாலசுந்தரம், பொன்கை ஆறுமுகம் போன்றோர் நடிந்தி-ருந்தனர்.

மேலும் மந்திரிக்குமாரியில் தளபதியாகவும், மனோன்மணியில் நடராஜனாகவும் தோன்றிய காட்சிகள் இவருக்குச் சிறப்புச் சேர்த்தன. மனோன்மணி நாடகத்தில் காலம் சென்ற வீரமணி ஐயரும் நடித்திருந்தார்.

நாம் இருவர், உண்மையின் வெற்றி போன்ற மேலும் சில நாடகங்களில் நடித்திருந்தாலும் தனது தந்தையின் நாடகங்களுக்கு ஆர்-மோனியம் வாசிப்பதை பெரும் பாக்கியமாகப் பெற்று தன் இசை அறிவை வளர்த்துக் கொண்டார்.

பாலசிங்கம் மாஸ்ரர் மிகவும் அமைதியா-கவே இருப்பார். அதிகம் பேசமாட்டார். ஆயினும் நானும் அவரும் பேசுவதற்கு இந்த நாடக்கலையே காரணமாக அமைந்துபோனது. அரியாலை சனசமூக நிலைய ஆண்டு விழா-வில் பிரதான நாடகமாக “ஆத்மாவின் இராகம்” என்ற எனது நாடகம் மேடையேறி-யது. கலைகளில் கால் பதித்தவர்கள் புனித மாக வாழவேண்டும் என்ற கருவை, ஒரு சங்கீத வித்துவானை மையப்படுத்தி எழுதிய நாடகம். அவருக்குப் பிடித்திருக்க வேண்டும். நாடகம் பற்றி நிறையவே என்னுடன் பேசினார். அன்றிலிருந்து இன்று வரை அந்தத் தொடர்பு இருந்து வருகிறது.

நிற்க, தமிழிசை உலகம் அறிந்த இந்தக் கலைஞனின் இசையோடிணைந்த வாழ்வின் பக்கங்களை சற்று விரிவாகப் பார்ப்போம்.

கீர்த்தனைகள் என்றால் தெலுங்கில் இருக்க வேண்டும் என்ற நிலையை மாற்றி தமிழிசை-யை முன்னிலைப்படுத்திய இவரது முயற்சியே ஒரு முக்கியமான கலைஞராக இவரை அறிய வைத்தது.

இவரது இசைப்பயணம் ஒரு நீண்ட பரிமா-ணத்தைக் கொண்டது.

சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான்கு வருடங்கள் கர்நாடக இசையை முறைப்படி பயின்ற இவர் 1959ஆம் ஆண்டு “சங்கீத பூஷணம்” பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். அங்கு இசை பயிலும் காலத்தில் இசையரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர், சங்கீத பூஷணம் ரி.கே.ரங்காச்சாரியார், மன்னார் குடி இராஜ கோபால்பிள்ளை, ரி.என்.சிவசுப்பிரமணியம் பிள்ளை, மயிலம் பி.வஜ்ரவேல், எஸ்.பார்த்த-சாரதி ஆகியோரிடம் பயின்று தனது கலை-யை வளர்த்துக் கொண்டார்.

இவரது இசை அரங்கேற்றம், 1959 புரட்டாதி 2 ஆம் திகதியின்று யாழ் நகரசபை மண்ட-பத்தில் அப்போதைய அரசாங்க அதிபர் ம.ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இசை ஆசிரியராகப் பணியாற்றிய இவர் சங்கீதபூஷணம் பால-சிங்கம் அவர்கள், பின்னர் சங்கீதபூஷணம் ஆ.நமசிவாயம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க யா/அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் இசை ஆசிரியராக பதவி ஏற்றார். 1959இலிருந்து 1995 வரை அங்கு தமிழிசை யைக் கற்பித்தார்.

இந்தக் காலகட்டத்தைத் தமிழிசையின் பொற்-காலமாகக் கொள்ளலாம். குறிப்பாக குடா நாட்டுத் தமிழர்களுக்கு இது பொருந்தும். இசை வகுப்புகள், இசைப் பரீட்சைகள், இசைப் போட்டிகள், இசை விழாக்கள் என்று நல்லூரும் அதனை அண்டிய பகுதிகளும் களைகட்டியிருந்த காலம். நல்லூர்க் கந்தசாமி கோயில் வீதியில் மக்கள் நிறைந்திருக்க இசை விழாக்கள் கோலகமாக நடந்தேறின.

தந்தையார் அண்ணாவியார் சபாபதி அவர்கள் அரியாலையூர் நாடகக்கலைக்கு ஆற்றிய பங்களிப்புப் போல பாலசிங்கம் அவர்களும் அரியாலையின் இசை வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டார். அரியாலை சித்தி விநாயகர் ஆலயச் சூழலில் விசுவநாதன் இசைக்கல்-லூரியை ஆரம்பித்து இசை வகுப்புகளையும் இசை விழாக்களையும் நடாத்தி வந்தார். கோயில் முன் வீதியில் நடைபெற்ற இவ்-வாறான ஒரு இசைவிழாவில் சங்கீதபூஷணம் ராம் குமாரசாமி அவர்கள் பாடிய “ராமனுக்கு மன்னன் முடி தரித்தானே” என்ற பாடல் இன்னும் என் நினைவில் இருக்கிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் அதிவிசேட பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழிசைக் கச்சேரிகளை நடாத்திப் பிரபலம் பெற்ற பாலசிங்கம் அவர்கள் உருவாக்கிய பல மாணவர்கள் இன்று பல பகுதிகளிலும் இசை வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருவது சிறப்பான அம்சமாகும்.


இவரது மாணவர்களில் திருமதி.குணபூஷணம் நாகராஜா (நோர்வே), சங்கீத வித்துவான் மா.யோகேஸ்வரன் (லண்டன்), சங்கீத வித்துவான் வை.யாதவன் (லண்டன்), சங்கீத கலாவித்தகர் சி.நாகராஜா (கொழும்பு), இசைக்கலைமணி உதயராணி முனீஸ்வரன் (முள்ளியவளை), சங்கீத வித்தகர் மகேஸ்வரி சுப்பிரமணியம் (யாழ்), இசைக்கலாவித்தகர் நவமணி பத்மநாதன் (கொழும்பு), சங்கீத வித்துவான் தில்லைமணி (யாழ்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தற்போது பாலசிங்கம் அவர்களது புதல்வி-களும் கலைப்பரம்பரையின் நீட்சியாக இசைப் பாரம்பரியத்தைப் பேணி வருகின்றனர். மூத்த புதல்வி இசைக்கலைமணி கல்யாணி சுதர்சன் அவர்கள் கனடாவில் வீணை, இசை வகுப்பு-கள் நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே.

சங்கீதபூஷணம் ச.பாலசிங்கம் அவர்களது இசைத்தொண்டினைப் பாராட்டி யா/திருமறைக்-கலா மன்றம், கனடா இளங்கலைஞர் மன்றம் விழாவெடுத்துக் கௌரவித்துள்ளனர். 80 வயதை நிறைவு செய்துள்ள இவர் தமிழிசை வளர்ச்சியையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இனிதே வாழ்ந்து வருகின்றார்.

2003 இல் கனடா வந்த போது அரியாலை மக்கள் எடுத்த பாராட்டு விழாவில் இவர் பாடிய தண்டபாணி தேசிகரின் “தாமரை பூத்த தடாகமடி – எங்கும் தமிழ் மணம் தேன் பொங்கிப் பாயுதடி” இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இந்த இசைத் தடாகத்தில் மென்மேலும் தமிழிசை என்றென்றும் பெருகிப் பாய வேண்டும்.



sriskanthan.p@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்-களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்-வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■